## உதயசூரியன் என்பது வெறும் சின்னம் அல்ல, நம் உயிருடன், உணர்வுடன் கலந்த சின்னம்:

# பாசிச சக்திகளின் அரசியல் சூழ்ச்சிகள் தமிழ்நாட்டில் என்றுமே வெற்றி பெறாது!

### கோவையில் நடைபெற்ற இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பில்

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

கோவை,மார்ச்.25-

**கோவையில் நடைபெற்ற, கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களைச் சேர்ந்த கழக இளைஞர் அணியின் மாவட்ட - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான ஆலோசனைக் கூட்டத்தில், கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்.**

**அப்போது அவர், ``நம் தலைவர் அவர்கள் பா.ஜ.க-வின் ஒவ்வொரு திட்டத்தையும் முறியடித்து வருகிறார். அதனால்தான் பா.ஜ.க-வுக்குத் தமிழ்நாட்டைப் பார்த்தால் கோபம். பாசிச சக்திகளின் அரசியல் விளையாட்டுகள் வடநாட்டில் வேண்டுமானால் செல்லுபடியாகலாம், ஆனால் இது தமிழ்நாடு; அவர்களின் சூழ்ச்சிகள் தமிழ்நாட்டில் என்றுமே வெற்றி பெறாது" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

மீண்டும் உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. ஒரு மாதத்திற்கு முன்பு கோவையில் இளைஞர் அணியின் மேற்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பை ஒரு மாநாடு போல நாம் நடத்திக் காட்டினோம். அந்தச் சந்திப்பிலே நீங்களெல்லாம் கலந்துகொண்டீர்கள். மிகப்பெரிய ஒரு வெற்றி நிகழ்ச்சியாக அதை மாற்றிக் காட்டினோம். இப்பொழுது மீண்டும் ஒரு முக்கியமான நேரத்தில் நாம் சந்திக்கின்றோம்.

#### மிகப்பெரிய வெற்றி

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு இந்த நிர்வாகிகள் கூட்டத்தை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஏப்ரல் 23-ஆம் தேதி நடக்க இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலிலும் நம் கழக அணி மீண்டும் ஒரு மிகப்பெரிய வெற்றியைப் பெற வேண்டும். அதற்கு நாம் அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்வதற்காக நான் இங்கு வருகை தந்துள்ளேன்.

நான் அடிக்கடி சொல்வதுண்டு, எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டாலும் இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள் உங்களையெல்லாம் சந்திப்பது, என் குடும்ப நிகழ்ச்சியில் கலந்துகொண்டு என் உறவினர்கள், சகோதரர்களைச் சந்திக்கின்ற உணர்வையும் நெகிழ்ச்சியையும் எனக்கு எப்பொழுதுமே கொடுக்கும்.

#### 'களத்தில் இளைஞர் அணி'

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது 'களத்தில் இளைஞர் அணி' என்கிற முன்னெடுப்பைத் தொடங்கி, நாம் மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டோம். அப்போது நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கிப் பிரச்சாரத்தை மேற்கொண்டீர்கள். நாடாளுமன்றத் தேர்தலில் உங்களின் உழைப்பினால், பிரச்சாரத்தினால் 100 விழுக்காடு வெற்றியையும் நீங்கள் பெற்றுத் தந்தீர்கள்.

இப்பொழுது மறுபடியும் 'களத்தில் இளைஞர் அணி' முன்னெடுப்பை நாம் தொடங்கி, இந்தச் சட்டமன்றத் தேர்தலிலும் அந்த 100 விழுக்காடு வெற்றியை நாம் பெற்றாக வேண்டும் என்று உரிமையுடன் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்ள நான் வந்திருக்கின்றேன்.

#### இளைஞர் அணி அமைப்பாளர்

கோவையை யார், யாரோ அவர்களின் கோட்டை என்று இன்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். கோவை மட்டும் அல்ல, ஒட்டுமொத்த மேற்கு மண்டலமும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்று நாம் அவர்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம், இந்தச் சட்டமன்றத் தேர்தல். அதற்கு இளைஞர் அணியின் பங்களிப்பு மிக, மிக முக்கியமாக இருக்கவேண்டும்.

குறிப்பாக வட்டம், கிளை, பாகம், வாக்குச்சாவடி வரை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வீடு வீடாகச் சென்று நம் பிரச்சாரத்தைச் செய்ய வேண்டும். இன்று இந்தியாவில் பல இயக்கங்கள் வாக்குச்சாவடி குழு அமைப்பதற்குத் திண்டாடிக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இன்று ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஓர் இளைஞர் அணி அமைப்பாளரை நாம் நியமனம் செய்துள்ளோம். ஒரு பெரிய இளைஞர் படையை நாம் அமைத்து வைத்துள்ளோம். இவ்வளவு பெரிய இளைஞர் படையைத் தேர்தல் என்கின்ற ஜனநாயகப் போருக்குத் தயார்படுத்துவதற்கான கூட்டம்தான் இன்று நடைபெறுகின்ற இந்த ஆலோசனைக் கூட்டம்.

கழகத்தில் 25 அணிகள் உள்ளன. ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள் சொல்வார், ``எத்தனையோ அணிகள் இருந்தாலும் இளைஞர் அணிதான் முதல் அணி, முதன்மையான அணி'' என்று அடிக்கடி சொல்வார். கலைஞர் சொன்னதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டிய நேரம் இந்தச் சட்டமன்றத் தேர்தல்.

#### மக்கள் சந்திப்பு

இளைஞர் அணியைப் பொறுத்தவரை அது ஒரு பயிற்சிக்களம். நாம் இன்று எடுக்கக்கூடிய இந்தப் பயிற்சிதான் நாளை உங்களின் தகுதியையும், வளர்ச்சியையும் தீர்மானிக்கப் போகின்ற பயிற்சி. இன்று மக்களைச் சந்திக்கப் போகிறோம், `அப்படியென்றால் இத்தனை நாளாக மக்களைச் சந்திக்கவில்லையா?' என்றால் கிடையாது, இத்தனை நாட்களாகவும் மக்களைச் சந்தித்துக்கொண்டுதான் இருந்தோம்.

கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தியாவிலேயே மக்களை, தினமும் சந்திக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் நம் கழகத் தலைவர் என்பதை, நீங்கள் மறந்துவிடக் கூடாது. தினமும் மக்கள் பணி செய்யக்கூடிய ஒரு தலைவர். அவரைப் பார்த்து நாமும் உழைத்துக்கொண்டு இருக்கிறோம். தொடர்ந்து இளைஞர் அணி பணிகள் எவ்வளவோ செய்திருக்கிறோம். 2019-ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு நாளும் இளைஞர் அணி பணிகளை நாம் பார்த்துப் பார்த்துச் செய்திருக்கிறோம். ஆனால், இப்பொழுது கடைசிநேரத்தில் நாம் இன்னும் அதிகமாகக் கடுமையாக உழைக்க வேண்டும். அப்பொழுதுதான் இத்தனை நாள் உழைத்ததற்கான முழுப் பலன் நமக்குக் கிடைக்கும். ஆங்கிலத்தில் ஃபைனல் புஷ் (Final Push) என்று சொல்வார்கள். கடைசி நேரத்தில் அந்த கூடுதல் முயற்சியைக் (Effort) களத்தில் நாம் காட்ட வேண்டும். ஆட்சியின் சாதனைகள் எத்தனையோ உள்ளன, அவற்றை மக்களிடம் நினைவுபடுத்த வேண்டியது நம் பொறுப்பு, நம் கடமை.

#### 920 கோடிப் பயணங்கள்

ஐந்து ஆண்டுகளில் எத்தனையோ திட்டங்களைத் நம் தலைவர் சொல்லிச் செய்து காட்டியிருக்கிறார். விடியல் பயணத் திட்டம்






மூலம் 920 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் பயன்பெறுகிறார்கள். `அன்புக் கரங்கள்' எனும் திட்டத்தின் மூலம் பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் கல்விக்காக மாதம் 2,000 ரூபாய் நம் அரசு வழங்குகிறது. 12,000 குழந்தைகள் இதுவரை பயன்பெற்றுள்ளனர். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டங்கள் கிடையாது.

அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வி கற்கச் செல்லும் மாணவர்களுக்குத் `தமிழ்ப் புதல்வன்' திட்டம், மாணவிகளுக்குப் 'புதுமைப் பெண்' திட்டம் ஆகியவற்றின் மூலம் மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. 13 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெற்றுள்ளனர். இந்த ஆண்டு அண்மையில் 10 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு இலவச மடிக்கணினிகளையும் வழங்கியுள்ளோம்.

விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டில், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே முதன்முறையாக 300 விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்கியுள்ளோம். கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் மூலம் ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் நம் முதலமைச்சர் வழங்கியுள்ளார்.

#### கோடைக்கால சிறப்பு நிதி

அந்தத் திட்டத்தை எப்படியாவது முடக்க வேண்டும் என்று சிலர் சதித் திட்டம் தீட்டினார்கள், நீதிமன்றத்துக்குச் சென்றார்கள். நம் தலைவர் மூன்று மாதங்களுக்குச் சேர்த்து, அதனுடன் கோடைக்கால சிறப்பு நிதியாக இன்று ஒரு கோடியே 32 லட்சம் மகளிருக்கு 5,000 ரூபாய் அவர்கள் கணக்கில் செலுத்தியுள்ளார். அதுமட்டுமல்ல, இன்னொரு உறுதிமொழியையும் நம் தலைவர் அளித்துள்ளார். மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்தவுடன், மகளிர் உரிமைத் தொகையை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்தித் தருவேன் என்ற வாக்குறுதியையும் நம் தலைவர் கொடுத்துள்ளார்.

`தாயுமானவர்' திட்டம் மூலம் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் நியாயவிலைக் கடையில் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை; அவர்களுக்கு வீட்டிற்கே பொருட்கள் வந்து சேரும் வகையிலான இத்திட்டத்தால் 28 லட்சம் பேர் பயன்பெற்று வருகிறார்கள். இப்படிச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அனைத்து வயதினருக்குமான திட்டங்களை நம் அரசு செயல்படுத்துகிறது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தேவையான திட்டங்களை நம் அரசு செயல்படுத்தியுள்ளது.

#### சாலை விரிவாக்கப் பணிகள்

நீலகிரி மாவட்டத்தில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நீலகிரி அனுமானபுரம் ஊசிமலைச் சாலைகளின் விரிவாக்கப் பணிகள் நடந்துள்ளன. குந்தா நீரேற்று மின் உற்பத்தித் திட்டம் (Pumped Storage Hydroelectric Project) நடைபெற்று வருகிறது. கூடலூர் அரசு மருத்துவமனையில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகிறது. 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒலிம்பிக் அகாடமி கட்டும் பணிகள் நீலகிரியில் நடைபெற்று வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை, விளாங்குறிச்சியில் 115 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்கா (IT Park) கட்டடம், 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சி விரிவாக்கப்பட்ட பகுதிக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், குறிச்சியில் தொழிலாளர்கள் தங்கும் விடுதி, சூலூரில் வான்வெளி மற்றும் பாதுகாப்புப் பூங்கா (Aerospace & Defence Park), 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செம்மொழிப் பூங்கா, 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரியார் நூலகம் என இந்த மாவட்டத்துக்குத் தேவையான திட்டங்களை நம் அரசு செய்து கொடுத்துள்ளது.

இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையானவற்றைச் செய்து கொடுத்ததால்தான், நம் தமிழ்நாடு இன்று இந்தியாவிலேயே இரட்டை இலக்க வளர்ச்சியான 11.19 விழுக்காட்டுடன் முதன்முறையாக அந்த இலக்கை எட்டியுள்ளது.

#### ஒரே முதலமைச்சர்

இதற்கெல்லாம் ஒன்றிய அரசு நமக்கு உதவி செய்ததா? ஆதரவு அளித்ததா? இல்லை. நமக்கு வழங்க வேண்டிய நிதியை ஒதுக்கவில்லை. எந்த ஒரு திட்டத்தையும் ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குப்

### உதயசூரியனின் வெற்றியை நாம் உறுதி செய்யவேண்டும்!

**உதயசூரியன் சின்னம் என்பது வெறும் சின்னம் அல்ல. அது நம் உயிருடன், உணர்வுடன் கலந்த சின்னம். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்டெடுத்த சின்னம் உதயசூரியன், நம் கழகத் தலைவர் அவர்களால் வெற்றியை மட்டுமே கொடுத்துக் கொண்டிருக்கின்ற சின்னம் உதயசூரியன், அந்த உதயசூரியனின் வெற்றியை நாம் உறுதி செய்யவேண்டும்.**

கொண்டு வரவில்லை. மெட்ரோ திட்டத்துக்கு நிதி கேட்டோம், அதற்கும் வழங்கவில்லை. கல்வி நிதி கேட்டோம், அதுவும் தரவில்லை. புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து, அதை ஏற்றுக் கொண்டால்தான் கல்வி நிதியை கொடுப்போம் என்று ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கிறது. கல்வி உரிமை, நிதி உரிமை என அனைத்து உரிமைகளையும் ஒன்றிய அரசு பறிக்கப் பார்க்கிறது.

பாசிச பா.ஜ.கவைத் துணிச்சலாக எதிர்த்து நிற்கக்கூடிய முதுகெலும்புள்ள ஒரே முதலமைச்சர், ஒரே தலைவர் நம் தலைவர் அவர்கள் மட்டும்தான். இன்று நான்கு அடிமைகளைப் பிடித்து வைத்துக் கொண்டால், தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது நுழைந்துவிடலாம் என்று ஒன்றிய பா.ஜ.க-வும் சங்கிக் கூட்டமும் நினைக்கிறது. ஆனால், நம் தலைவர் அவர்கள் பா.ஜ.க-வின் ஒவ்வொரு திட்டத்தையும் முறியடித்து வருகிறார். அதனால்தான் பா.ஜ.க-வுக்குத் தமிழ்நாட்டைப் பார்த்தால் கோபம். பாசிச சக்திகளின் அரசியல் விளையாட்டுகள் வடநாட்டில் வேண்டுமானால் செல்லுபடியாகலாம், ஆனால் இது தமிழ்நாடு; அவர்களின் சூழ்ச்சிகள் தமிழ்நாட்டில் என்றுமே வெற்றி பெறாது.

#### டெல்லி vs தமிழ்நாடு

வரவிருக்கின்ற சட்டமன்றத் தேர்தல் `டெல்லி vs தமிழ்நாடு' தேர்தல் என்று, நம் தலைவர் அவர்கள் தெளிவாகச் சொல்லிவிட்டார். உடனே எடப்பாடி பழனிசாமி `ஏன் டெல்லி என்று சொல்கிறீர்கள்? டெல்லியிலா சட்டமன்றத் தேர்தல் நடக்கிறது?' என்று கேட்கிறார். நான் கேட்கிறேன், வாரத்துக்கு ஒருமுறை டெல்லிக்குச் சென்று அமித்ஷா வீட்டின் முன் நிற்கிறீர்களே, அப்பொழுது இது டெல்லி vs தமிழ்நாடுதானே? தமிழ்நாட்டில் அ.தி.மு.க-வின் தலைமையகம் சென்னையில் உள்ளது. ஆனால் எடப்பாடி பழனிசாமியின் தலைமை அலுவலகம் இன்று டெல்லியில்தான் உள்ளது.

முன்பெல்லாம் முகத்தை மூடிக்கொண்டு மறைமுகமாகச் சென்றார். இப்பொழுது வெளிப்படையாகவே செல்லத் தொடங்கிவிட்டார். இன்று அ.தி.மு.க-வின் கூட்டணிக் பேச்சுவார்த்தை எல்லாம் அமித்ஷா வீட்டில் டெல்லியில் நடக்கிறது.

நான் மீண்டும் சொல்கிறேன், தி.மு.க என்பது அண்ணா உருவாக்கிய கட்சி. இன்று அ.தி.மு.க என்பது அமித்ஷாவுக்கு அடிமையாக இருக்கக்கூடிய ஒரு கட்சி. அடிமைகளுக்கு இதெல்லாம் ஒரு பிரச்சினை இல்லை, எஜமானர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஓடிச் சென்றாக வேண்டும். `சென்னையிலிருந்து ஓடி வாருங்கள்' என்று சொன்னாலும் டெல்லிக்கு ஓடிச் செல்வதற்கு அந்த அடிமைக் கூட்டம் தயாராக உள்ளது.

#### தைரியமாகச் சொல்கிறோம்

முன்பெல்லாம் கார் மாறி, மாறி சென்றார்கள். கார் மாறுவதும் கால் மாறுவதும் அடிமை கூட்டத்துக்கு ஒன்றும் புதிதல்ல. அ.தி.மு.க கூட்டணிக்குள் இப்பொழுது ஒரு பெரிய போட்டியே நடக்கிறது. `நீ பெரிய முரட்டு அடிமையா அல்லது நான் பெரிய முரட்டு அடிமையா?' என்று அவர்களுக்குள் போட்டி நடக்கிறது. இன்று ஆளாளுக்கு டெல்லிக்குச் சென்று வணக்கம் வைத்துவிட்டு வருகிறார்கள். மக்களைச் சந்தித்து இதையெல்லாம் எடுத்துக்கூறுங்கள். இந்த முறை 'பத்துத் தோல்வி பழனிசாமி', 'படுதோல்வி பழனிசாமி' ஆவது உறுதி.

நம் அரசின் திட்டங்கள் எல்லாம் தொடர வேண்டும். கடந்த அ.தி.மு.க 10 ஆண்டு ஆட்சியில் தமிழ்நாடு எவ்வளவு இழந்தது என்பதை மக்களை யோசித்துப் பார்க்கச் சொல்லுங்கள். நாம் இன்று தெளிவாகத் தைரியமாகச் சொல்கிறோம், "மீண்டும் நம் தலைவர்தான் முதலமைச்சர்" என்று. அ.தி.மு.க-வால் அவ்வளவு துணிச்சலாகச் சொல்ல முடிகிறதா?

இதுவரை அமித்ஷா அவர்களோ, மோடி அவர்களோ எடப்பாடி பழனிசாமி தலைமையில்தான் ஆட்சி என்று கூறவில்லை. அவர்களே ஏற்றுக்கொள்ளாத எடப்பாடி பழனிசாமியை, தமிழ்நாட்டு மக்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள்? ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். இந்த முறையும் மோடி, அமித்ஷா மற்றும் அவர்களின் அடிமைக் கூட்டணியைத் தமிழ்நாடு நிச்சயம் தோற்கடிக்கும்.

எப்போதுமே ஒரு சிறந்த பொருள் வந்தால், உடனே ஒரு கூட்டம் அதைப் போன்று போலியாக உருவாக்க முயற்சிப்பார்கள். அதை நாம் அசெம்பிள்டு செட் (Assembled Piece) அல்லது சைனா மேக் (China Make) என்று சொல்வோம். அதுபோலத்தான் இங்கு அ.தி.மு.க என்பது இப்பொழுது டெல்லி மேக் (Delhi Make). அனைத்தையும் ஒன்றிணைத்து அசெம்பிள் செய்து (Assemble) வைத்துள்ளார்கள். அது கொஞ்சக் காலத்துக்கு உண்மையானது போல இருக்கும். ஆனால், தேர்தல் முடிந்த பிறகு அது ஒரிஜினல் கிடையாது, டெல்லியிலிருந்து அசெம்பிள் செய்த பீஸ் என்று தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிந்துவிடும். அப்படிப்பட்ட அசெம்பிள்டு பீஸாகத்தான் அ.தி.மு.க கூட்டணி உருவாகியிருக்கிறது.

#### தலைவர் தான் சாம்பியன்

இன்று பா.ஜ.க-வின் பி-அணி, சி-அணி, எனப் பல அணிகளை இறக்கியுள்ளார்கள். எத்தனை அணிகள் வந்தாலும் தி.மு.க தான் சாம்பியன், நம் தலைவர் தான் சாம்பியன் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். இங்கு வந்துள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் முதலில் உங்கள் குடும்பத்தினரிடம் பேசுங்கள். உங்கள் குடும்பத்தினர் அனைவரும் நம் கழகத்துக்கு வாக்களிக்க வேண்டும். நம் குடும்ப வாக்குகள் சிதறாமல் தி.மு.க கூட்டணிக்கு வந்தாக வேண்டும்.

உங்கள் நண்பர்களிடம்பேசுங்கள். கழக ஆட்சியில் நாம் செய்துள்ள சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள். மாற்றுக் கட்சியில் உள்ள நண்பர்களிடமும் கழக வரலாற்றையும் திட்டங்களையும் எடுத்துக்கூறுங்கள். இப்பொழுது கொள்கையற்ற கூட்டம் ஒன்று உருவாகியுள்ளது. அவர்களிடம் பேசி அவர்களை கொள்கை மயப்படுத்துகின்ற முயற்சியில் நாம் ஈடுபடுவோம்.

திராவிட இயக்கம் ஏன் தோன்றியது, என்னென்ன சாதனைகள் செய்துள்ளது என்பதை எடுத்துச் சொல்லுங்கள். நமக்கு எதிராகப் பரப்பப்படுகின்ற பொய் செய்திகளையும், வதந்திகளையும் ஆதாரத்துடன் முறியடியுங்கள். முக்கியமாக, கடந்த அ.தி.மு.க ஆட்சியில் தமிழ்நாடு எவ்வளவு பின்னோக்கிச் சென்றது என்பதைத் தரவுகளுடன் சொல்லுங்கள். இந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு எவ்வளவு முன்னேறியுள்ளது என்பதையும் தரவுகளுடன் விளக்குங்கள்.

#### இளைஞர் அணியின் இலக்கு

வட்ட, கிளை, பாக இளைஞர் அணி நிர்வாகிகள், உங்கள் வாக்குச்சாவடி பகுதியில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தது இரண்டு முறை சென்று வாக்கு கேளுங்கள். ஒவ்வொரு வீட்டிலேயும் நமது இலக்கு 18 வயது முதல் 35 வயது வரை உள்ள அனைத்து வாக்காளர்களுமே இளைஞர் அணியின் இலக்கு. அன்பகத்தில் தேர்தல் அறிக்கைகள் மற்றும் பிரச்சாரப் பொருட்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன. அவை மாவட்ட அமைப்பாளர் மூலமாக உங்களுக்கு விரைவில் அனுப்பி வைக்கப்படும். அதை ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொரு வாக்காளரிடமும் கொண்டு சேருங்கள்.

நான் உங்களை பலமுறை சந்திக்கின்ற மாதிரி, வாக்குச்சாவடி நிலையில் உள்ள இளைஞர் அணிப் பொறுப்பாளர்களை நீங்கள் அடிக்கடி சந்தியுங்கள். உங்களில் பலர் பி.எல்.ஏ, பி.எல்.சி பொறுப்பில் இருப்பீர்கள். அந்தப் பொறுப்பில் கவனமாகப் பணியாற்றுங்கள். உங்கள் தொகுதியில் இளைஞர் அணி நிர்வாகியின் பணி தனித்துவமாகத் தெரிய வேண்டும். மக்களிடம் பேசும் பொழுது கவனமாகவும் கட்டுப்பாட்டோடும் பேசுங்கள். ஒரு தவறான வார்த்தை பேசினாலும் அதைப் பெரிதுபடுத்துவதற்கு ஊடகங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. எனவே, மிகுந்த கவனத்துடன் செயல்படுங்கள்.

அடுத்த ஒரு மாதத்துக்கு வெற்றிமட்டும்தான் நம் இலக்காக இருக்க வேண்டும். யாருடைய வாக்குச்சாவடியில் அதிக வாக்குகள் பெறப்படுகின்றன என்பதை நான் கவனிப்பேன். உங்களுக்குள் ஓர் ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும். அடுத்த 32 நாள்கள் மிக, மிக முக்கியம். ஒவ்வொருவரும் உங்கள் பொறுப்புகளைப் பிரித்துக்கொண்டு, நுணுக்கமாக வேலை செய்தால், மிகப்பெரிய வெற்றி உறுதி.

ஒரு வாக்குச்சாவடியில் 1,000 வாக்காளர்கள் இருந்தால், அவர்கள் அனைவரையும் நீங்கள் சந்தித்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். இந்தப் பணிகளைச் செய்யும்போது உங்கள் மாவட்ட, ஒன்றிய, நகரச் பேரூர் செயலாளர்களுடன் கலந்து ஆலோசித்துச் செயல்படுங்கள். அவர்கள் உங்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குவார்கள்.

#### பதிவு செய்யுங்கள்

ஒவ்வொரு நாளும் எத்தனை பேரைச் சந்தித்தீர்கள் என்பதை உங்கள் குறிப்பேட்டில் தேதியுடனும் புகைப்படத்துடனும் பதிவு செய்யுங்கள். தேர்தல் பிரச்சாரத்திற்காக இன்னும் 15 நாள்களில் மீண்டும் நான் வரும்போது அதைச் சரிபார்ப்பேன். யார் உண்மையாக உழைக்கிறார்களோ, அவர்களுக்கான அங்கீகாரம் நிச்சயம் தேடி வரும். அதற்கு நான் பொறுப்பு. ஆனால் கழகத்தின் வெற்றிக்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டும்.

நான் எப்படி வேலை செய்கிறேன், நீங்கள் எப்படி வேலை செய்கிறீர்கள் என்பதை, தலைவர் கவனித்துக் கொண்டிருக்கிறார். இது உங்களுக்கு மட்டுமல்ல, நம் இருவருக்கும் சேர்த்து வைக்கப்பட்டுள்ள தேர்வு. இத்தேர்வில் நாம் சிறப்பான மதிப்பெண்களுடன் வெற்றி பெற வேண்டும். `தி.மு.க. காரன் என்றால் சிங்கிள் டீயைக் குடித்துவிட்டு இரவு பகலாக வேலை செய்வான்' என்று முன்பு சொல்வார்கள். இன்று அதை நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். தலைவரிடமிருந்து ஒரு செய்தி வந்தால் போதும், 234 தொகுதிகளிலும் பூத் வாரியாக களம் இறங்க தி.மு.க இளைஞர் அணி எப்போதும் தயாராக உள்ளது என்பதை மெய்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு என்றைக்கும் தலைகுனியாது, நம் தலைவர் சொல்வதுபோல் தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்குக் அவுட் ஆப் கண்ட்ரோல்தான் என்பதைப் புரிய வைக்க வேண்டிய தேர்தல் இது. தலைவர் நமக்குக் கொடுத்துள்ள இலக்கு 200 தொகுதிகள், ஆனால், 234 தொகுதிகளிலும் நம் இலக்கு வெற்றியாகத்தான் இருக்க வேண்டும். அந்த வெற்றி கோவை, நீலகிரி மாவட்டங்களிலிருந்து தொடங்க வேண்டும். கடந்த முறை கோவையில் தவறவிட்ட இடங்களை இந்த முறை மீட்டெடுக்க வேண்டும். நீலகிரி மாவட்டத்திலும் 100 சதவிகித வெற்றியை நாம் பெற்றாக வேண்டும்.

எந்த ஒரு விளையாட்டாக இருந்தாலும், தோல்வியையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் விட்ட இடத்தைப் பிடிக்க முடியும். அப்போதுதான் அந்த வெற்றிக்கு மிகப் பெரிய மரியாதை கிடைக்கும்.

அதனால்தான் இளைஞர் அணி நிர்வாகிகள் உங்களுடன் சேர்ந்து கோவையிலிருந்து இந்தப் பிரச்சாரத்தை நான் தொடங்கியுள்ளேன். உங்கள் உழைப்பை நான் நம்புகிறேன். நம்மை விட இளமையாக நம் தலைவர் உழைத்துக் கொண்டிருக்கிறார். நம் தலைவருக்காகவும் அவரின் கரங்களை வலுப்படுத்தவும் நாம் வெற்றி பெற வேண்டும்.

#### மீண்டும் ஒலிக்க வேண்டும்

ஏப்ரல் 23-ஆம் தேதி சட்டமன்றத் தேர்தல், மே 4-ஆம் தேதி வாக்கு எண்ணும்போது 234 தொகுதிகளிலும் நம் கூட்டணி வெற்றி பெற்றது என்ற செய்தி வர வேண்டும். 'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்' என்கின்ற அந்தக் குரல் மீண்டும் தமிழ்நாட்டில் ஒலிக்க வேண்டும். அதற்கு உதயசூரியன் அனைத்து தொகுதிகளிலும் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும்.

உதயசூரியன் சின்னம் என்பது வெறும் சின்னம் அல்ல. அது நம் உயிருடன், உணர்வுடன் கலந்த சின்னம் உதயசூரியன். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்டெடுத்த சின்னம் உதயசூரியன், நம் கழகத் தலைவர் அவர்களால் வெற்றியை மட்டுமே கொடுத்துக் கொண்டிருக்கின்ற சின்னம் உதயசூரியன், அந்த உதயசூரியனின் வெற்றியை நாம் உறுதி செய்யவேண்டும். அதை மனதில் வைத்துக் கொண்டு அடுத்த 32 நாட்கள் நம் பணிகளைத் திட்டமிட்டுச் செய்வோம். தேர்தல் பிரச்சாரத்தின் போது மீண்டும் உங்களைச் சந்திப்பேன். அப்பொழுது உங்கள் வெற்றிச் செய்தியை நீங்கள் உறுதிப்படுத்த வேண்டும். நிச்சயமாகச் செய்வீர்களா? நீங்கள் அவ்வாறு செய்தால், உங்கள் உழைப்புக்கான அங்கீகாரத்தைத் தலைவரிடம் போராடி நான் பெற்றுத் தருவேன். அடுத்த 32 நாட்கள் நமக்கு ஒரே இலக்குதான். நம் பகுதியில் தி.மு.க கடந்த நாடாளுமன்ற தேர்தலில் பெற்றதை விட அதிக வாக்கு வித்தியாசத்தில் நாம் வெற்றி பெற வேண்டும். தேர்தல் பிரச்சாரத்தின்போது மீண்டும் உங்களைச் சந்திப்பேன் என்று கூறி, இந்த சிறப்பான வாய்ப்பை கொடுத்த மாவட்டக் கழக நிர்வாகத்துக்கும், வருகை தந்துள்ள அனைத்து அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவருக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மண்டலப் பொறுப்பாளர் செந்தில் பாலாஜி, அரசு கொறடா ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தளபதி முருகேசன், தொண்டாமுத்தூர் ரவி, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு, செந்தமிழ்ச் செல்வன், தகவல் தொழில்நுட்ப அணியின் இணைச் செயலாளர் மருத்துவர் மகேந்திரன், கோட்டை அப்பாஸ், சிந்து ரவிச்சந்திரன், கழகச் செய்தித் தொடர்புக் குழுவின் மாநிலத் துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் சபரி கார்த்திகேயன், சசிகுமார், ஹக்கீம், தனபால் உள்பட இளைஞர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.